DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40 /2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.17

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மனோகரன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 24th day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது தச்சக்குடி கிராம நிர்வாக அலுலவராக பணியாற்றி வருகிறேன். 2021ம் ஆண்டு எரிச்சநத்தம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுலவராக பணியில் இருந்தேன். கடந்த 09.11.2021ம் தேதி மதியம் 02.00 மணியில் நான் என் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, என்னை எம்.புதுப்பட்டி காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்தமாக பர்மா காலனியில் ஒருவரை விசாரிக்கவேண்டும் என்பதன் அடிப்படையில் நானும், தலையாரியும் மதியம் 02.15 மணிக்கு சென்றோம். அப்போது ஆய்வாளர் மாரிமுத்து என்ற நபரை கைது செய்துள்ளதாகவும், அவரை விசாரிக்கவேண்டும் என்று சொன்னார். அப்போது மாரிமுத்து தானாக முன்வந்து சம்பவம் குறித்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததோடு, தன்னை அழைத்துச்சென்றால் சம்பவ இடத்தை காட்டுவதாகவும், சம்பவத்தை எப்படி செய்தேன் என்று செய்து காட்டுவதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியும், சார்பு

ஆய்வாளரும், நானும், தலையாரியும் கையொப்பம் செய்தோம். ஆஜர் எதிரி தான் மாரிமுத்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.5 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சொன்ன சம்பவ இடமான எரிச்சநத்தம் கிராமத்திற்கு கிழக்குபுறம் உள்ள கோட்டையம்மன்கோவில் அருகே உள்ள ஊரணிக்கு சென்றோம். அங்கு எதிரி, கொலை செய்த விதத்தையும், கொலை செய்த இடத்தையும் காட்டினார். அப்போது எதிரி, இறந்த செல்வகணேஷின் செல்போனை குமுளங்குளம் கண்மாயிக்குள் போட்டதாகவும் சொன்னார். மேலும் சம்பவத்தின் போது எதிரி தான் அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த டிரௌசரை முட்புதருக்குள் எடுத்து ஒப்படைத்தார். அதனை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் எதிரியும், சார்பு ஆய்வாளரும், நானும், தலையாரியும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.6 ஆகும். டிரௌசர் சா.பொ.7 ஆகும். அந்த அத்தாட்சி குமுளங்குளம் கண்மாயில் வைத்து தயாரிக்கப்பட்டது. பின்னர் இரவு சுமார் 07.30 மணிக்கு வளையங்குளத்தில் உள்ள எதிரியின் மனைவி வீட்டிற்கு அழைத்துச்சென்றார். அவரது பெயர் மகேஷ்வரி. அங்கிருந்து ரத்தக்கறை இருந்த தண்ணீரில் அலசிய சட்டை மற்றும் காவி கலர் வேஷ்டி ஆகியவற்றை எதிரி எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் எதிரியும், சார்பு ஆய்வாளரும், நானும், தலையாரியும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.7 ஆகும். ரத்தக்கறை இருந்த தண்ணீரில் அலசிய சட்டை சா.பொ.8, காவி கலர் வேஷ்டி சா.பொ.9 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

காவல் ஆய்வாளர் என்னை அழைக்கும் போது நான் என்னுடைய விஏஓ அலுவலகத்தில் இருந்தேன். பொதுவாக விஏஓ அலுவலகத்திற்கு பொதுமக்கள் பல வேலைகளுக்காக வந்துபோவதுண்டு என்றால் சரிதான். இந்த வழக்கில்

என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துவிட்டு விஏஓ அலுவலகத்திற்கு செல்லவேண்டும் என்றால் ஒரே ஊருக்குள் சென்றதால் நான் சொல்லவில்லை, எல்லையை தாண்டி வெளியே சென்றால் தான் சொல்லவேண்டும். நான் எதிரியை கைது செய்து வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்வதற்கு முன்பாக எப்போது ஆய்வாளர் எந்த இடத்தில் வைத்து எப்போது எதிரியை கைது செய்தார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் செல்வதற்கு முன்பு ஆய்வாளர் எதிரியை எவ்வளவு நேரமாக விசாரித்தார், ஏதேனும் வாக்குமூலம் பெற்றாரா என்று என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மொத்தம் 5, 6 பக்கங்கள் கொண்டது. நான் ஒப்புதல் வாக்குமூலத்தை படித்துப் பார்த்து ஒப்புதல் வாக்குமூலத்தின் கடைசி பக்கத்தில் கையெழுத்து செய்தேன். கிராம நிர்வாக அலுவலருக்கு Movement Diary எதுவும் உண்டா என்றால் அப்படி எதுவும் கிடையாது. கிராம நிர்வாக அலுவலருக்கு Movement Diary என்பது உண்டு என்றும், அதில் வெளியே செல்லும் போது கட்டாயம் அதில் எழுதவேண்டும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திலிருந்து செல்போன் கிடந்ததாக சொல்லப்படும் கண்மாய்க்கு சோளக்காட்டு பாதை வழியாக நடந்தே தான் சென்றோம். ஜீப் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலேயே தான் இருந்தது. டிரௌசரை எடுத்துக்கொடுத்ததாக சொல்லப்படும் இடம் வரை ஜீப்பில் செல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை தண்ணீரில் அலசியதால் அதில் ரத்தக்கறை இருந்ததா இல்லையா என்றால் இரத்தக்கறை இருந்தது. டிரௌசரை போலீஸார் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றால் இல்லை, எதிரி எடுத்து ஆஜர் செய்தார். என் முன்னிலையில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அவர் எந்த சான்றுபொருளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கம் என்று எனக்கு தெரியவில்லை என்றால்

சரியல்ல. காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நீதிமன்றத்தில் எதிரியை போலீஸார் அடையாளம் காட்டி தான் அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>